## கீழே உள்ள வேதவசனங்களுடன் நிறைவு செய்வோம்:

“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுகிறிஸ்து) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் (இயேசுகிறிஸ்து) தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை (இயேசு கிறிஸ்துவை) விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனா யிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டா யிற்று.”[4]

“…அப்படியே, மனுஷகுமாரனும் (இயேசுகிறிஸ்து) ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் (விலைகொடுத்து வாங்குதல்) தம்முடைய (கிறிஸ்துவினுடைய) ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.”[5]

“அவருடைய (கிறிஸ்துவினுடைய) நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை (இயேசுகிறிஸ்து) ஏற்றுக்கொண்ட வர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.”[6]

தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றி வேதவசனங்கள் கூறுவது என்ன?

### அவைகள் கூறுவதாவது

- நாம் தேவனுடைய குமாரனை விசுவாசித்தால், நாம் கெட்டுப்போகாமல் (தேவனுடைய கோபத்திற்கு உள்ளாகாமல்) நித்திய ஜீவனை அடைவோம்
- தேவன் உலகத்தில் மிகவும் அன்புகூர்ந்து அவருடைய ஒரேபேறான குமாரனை (இயேசுகிறிஸ்துவை) தந்தருளினார்
- உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் இயேசுவை அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.
- இயேசுவை நாம் விசுவாசித்தால், நாம் ஆக்கினைக்குள் ளாகத் தீர்க்கப்படுவதில்லை.
- நமது பாவங்களுக்கான மீட்கும்பொருளாக கிறிஸ்து தம்முடைய ஜீவனைக் கொடுத்தார்; வேறுவார்த்தையில் சொன்னால் கிறிஸ்து நம்மை விலைகொடுத்து வாங்கியுள்ளார்.
- இறுதியாக, நாம் தேவனுடைய பிள்ளைகளாவதற்கு, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. ரோமர் 5:6-10
2. ரோமர் 3:23
3. 1 கொரிந்தியர் 15:1-4
4. யோவான் 3:16-18
5. மத்தேயு 20:28
6. யோவான் 1:12

*(தனிச்சுற்றுக்கு மட்டும்)*

மேலும் அறிவதற்கு தொடர்புகொள்ள:
**whoisjesus008@gmail.com**






# இயேசு யார்?

இயேசு கிறிஸ்து ஒரு நல்ல ஆசிரியர், ஒரு நல்ல மனிதப்பிறவி, ஒரு வல்லமையான தீர்க்கதரிசி என சிலர் கூறுகிறார்கள்; வேறு சிலரோ அவர் தேவனுடைய குமாரன், சரீரத்தில் இருந்த தேவன் என்றும் கூறுகிறார்கள்.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்வின் நோக்கம் என்ன?

இதனை அறிவது என் வாழ்க்கைக்கு முக்கியமாக இருக்கிறது ஏன்?

இந்தக் கேள்விகளுக்கான பதிலை அறிவதற்கு, வேதாகமம் என்ன கூறுகிறது என்று சில வசனங்களை நாமே ஆராய வேண்டும். நமது வாசிப்பை தொடங்குவோம்:

“அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.”[1]

“…. எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமை அற்றவர்களாகி (தேவனுடைய மகிமையின் அளவிற்கு குறைந்தவராகக் காணப்படுவது).”[2]

எல்லா மனித குலத்தையும் பற்றிய சில உண்மைகளை மேற்கண்ட வசனங்கள் குறிப்பிடுகின்றன. அவைகள் சொல்வது நாம் அனைவரும்:

- பெலனற்றவர்கள்
- அக்கிரமக்காரர்
- பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்கள்
- தேவனுக்குச் சத்துருக்கள் (நம்முடைய பாவ சுபாவத்தினால்)
- தேவனுடைய குமாரனை நாம் விசுவாசிக்காவிட்டால் தேவ கோபாக்கினையை எதிர்கொள்ள நேரிடும்

மேற்கண்ட வேதவசனங்கள் மேலும் சொல்லுவதாவது

- கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் (நம் அனைவருக்காகவும்)
- நாம் இன்னமும் பாவிகளாக இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்
- கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட்டோம் (நீதியாக்கப்பட்டோம், முழுமையாகக் கழுவப்பட்டோம்)
- கிறிஸ்துவின் மூலம் வரப்போகிற தேவனுடைய கோபாக்கினையிலிருந்து நாம் இரட்சிக்கப்படுவோம்
- கிறிஸ்துவின் மரணத்தினாலே நாம் ஒப்புரவாக்கப்பட்டோம் (தேவனிடத்தில் தயவு பெற்றோம்)
- கிறிஸ்துவின் ஜீவனாலே நாம் இரட்சிக்கப்படுவோம்.

மேலும் தெளிவாக அறிந்துகொள்ள வாசிப்போம்:

“அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப் படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண் டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாய் ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன் றாம் நாளில் உயிர்த்தெழுந்து.”[3]

சுவிசேஷம் என்றால் நல்ல செய்தி. மேற்கண்ட வேதவசனங்களின் அடிப்படையில் நற்செய்தி என்பது என்ன?

- கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்
- கிறிஸ்து அடக்கம்பண்ணப்பட்டார்
- வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவானவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (திரும்பவும் உயிர் பெற்றார்)

மேலும் நமக்குத் தேவை என வசனங்கள் கூறுவது

- இந்த நல்ல செய்தியை ஏற்றுக்கொண்டு அதை விசுவாசிக்கவேண்டும்
- இந்த நல்ல செய்தியில் நிலைத்திருந்து அதைக் கைக்கொள்ளவேண்டும்
- இந்த நற்செய்தி மூலமாக நாம் இரட்சிக்கப்படுவோம்